359—

துணை மின் நிலையம்

***33964—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு, தேன்கனிக்கோட்டை 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து குண்டுக்கோட்டை 11 கிலோ வோல்ட் மின்னூட்டி வழியாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, தேன்கனிக்கோட்டை 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் இயங்கி வந்த 2 x 5 MVA திறன் கொண்ட மின்மாற்றிகள் 2 x 8 MVA திறன் கொண்ட மின்மாற்றிகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், குண்டுக்கோட்டை 11 கிலோ வோல்ட் மின்னூட்டி, 11 கிலோ வோல்ட் தின்னூர் மின்னூட்டி மற்றும் 11 கிலோ வோல்ட் சாப்பரப்பள்ளி மின்னூட்டி என இரண்டு மின்னூட்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், மின்னூட்டியின் மின்கடத்தி—conductor அதிகத் திறனுள்ள மின்கடத்தியாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எனவே, தளி தொகுதி, பெட்டமுகிலாளம் கிராமத்தில் புதியதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

2015 செப்டம்பர் 28]

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தளி தொகுதியில், பெட்டமுகிலாளம், இருதுகோட்டை, சந்தனப்பள்ளி, ஹனுமந்தபுரம் மற்றும் இரத்தினகிரி உட்பட 5 ஊராட்சிகளுக்குட்பட்ட 120 மலைக் கிராமங்களில் குறைந்த மின்னழுத்தத்தின் காரணமாக தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை. குடிநீருக்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான மின் மோட்டார்கள் இயங்குவதில்லை. அதனால், அடிக்கடி குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தளி தொகுதி, பெட்டமுகிலாளம் கிராமத்தில் 33 கிலோ வாட் துணை மின் நிலையம் ஒன்றை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பெட்டமுகிலாளம் கிராமத்திற்கு அருகிலுள்ள தேன்கனிக்கோட்டை 33/11 துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அங்கே 12.5 MVA திறன் கொண்ட மின் பளு தேவையிருந்தது. ஆனால், அங்கே 2 x 5 MVA திறன் கொண்ட மின் மாற்றிதான் இயங்கி வந்தது. ஆகவே, 2.5 MVA திறன் அளவிற்கு குறைவாகத்தான் மின் பளு இருந்தது. அதனால் பிரச்சினை இருந்தது. ஆனால், இப்பொழுது அதைக் கண்டறிந்து 5 MVA திறன் கொண்ட 2 மின்மாற்றிகளை மாற்றிவிட்டு, 8 MVA திறன் கொண்ட 2 மின்மாற்றிகள் அங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. அதனால் இப்பொழுது அங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மின் திறன் 16 MVA ஆகும். அங்கே தற்போதைய மின் பளு தேவை 12.5 MVA தான். ஆகவே, இன்னும் 3 ஆண்டுக் காலத்திற்குப் பிரச்சினை இல்லை. ஆண்டுக்காண்டு அங்கே 0.98 MVA திறன் அளவில்தான் மின் பளு அதிகரித்து வருகிறது. ஆக, இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மின் திறனால் ஏறத்தாழ 3, 4 வருடங்களுக்குப் பிரச்சினைகள் இல்லை. அந்த அளவிற்கு அவை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதற்கும் மேலாக, அந்த 11 KV feeder–மின்னூட்டி இரண்டு மின்னூட்டிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மின்னூட்டிகளில் பிரச்சினைகள்

[2015 செப்டம்பர் 28

வருவதற்கு வாய்ப்பில்லை. அதுமட்டுமல்ல; அங்கேயிருக்கின்ற மின் கடத்திகள் (conductors) மாற்றப்பட்டிருக்கின்றன. மின் பளு தேவைக்கு தகுந்தாற்போல், மின் திறனை ஏற்றுக்கொள்கிற அளவிற்கு அந்த மின் கடத்தி (conductor) மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கே இப்பொழுது குறைந்தழுத்த, தாழ்வழுத்த மின்சாரப் பிரச்சினைக்கு வாய்ப்பில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பெருகிவரும் மின்சாரத் தேவையை, இனிமேல் வரக்கூடிய பிரச்சினையை கருத்தில் கொண்டு, தேவை ஏற்படின், இப்பொழுது அவசரம் இல்லை; இருந்தாலும் ஒன்றிரண்டு ஆண்டுகளிலே மின் தரம் உயர்த்தப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு அங்கே புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படும் காலத்திலே அதை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கெங்கெல்லாம் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கண்டறியப்பட்ட இடங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு, இதுவரையில் 234 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

எங்கெங்கு துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்பதை உடனடியாக ஆய்வு செய்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். பெருகிவரும் மின் பளுவையும் ஆண்டுக்காண்டு கணக்கிட்டு, எந்தெந்த இடங்களிலெல்லாம் தேவைப்படுகின்றதோ, அந்தந்த இடங்களிலெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருப்பதன் அடிப்படையிலே, இதுவரையில் 234 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 234 என்பது ஒரு மந்திரச் சொல். தமிழ்நாட்டில் இருக்கிற சட்டமன்றத் தொகுதிகளும் 234. என்ன பொருத்தம் பாருங்கள்!

2015 செப்டம்பர் 28]

2016-லே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 234 தொகுதிகளிலும் பெறப்போகிற வெற்றியை symbolic ஆகக் குறிக்கின்ற வகையில் யதார்த்தமாகவே 234 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேவை ஏற்படுகிற இடங்களிலெல்லாம் உடனுக்குடன் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு வேண்டிய பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக் கிராமங்களில், வனப் பகுதிகளில் அடிக்கடி மரத்திலிருந்து கிளைகள் உடைந்து விழுவதால், மின் கம்பிகள் அறுந்து, மின் தடை ஏற்படுகிறது. ஆகவே, வனப் பகுதிகளிலுள்ள மலைக் கிராமங்களுக்கு புதை வடக் கம்பிகள் மூலமாக மின்சாரம் விநியோகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மேலும், என்னுடைய தளி தொகுதியில் இரத்தினகிரி ஊராட்சி, சின்னக்கல்லுப்பள்ளி கிராமத்திற்கும், அதேபோல, பெட்டமுகிலாளம் ஊராட்சி, மாட்டுக்காரன்கொட்டாய் மரத்திற்கும், நாடு சுதந்திரம் பெற்று 69 ஆண்டுகள் ஆகியும், இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. கற்காலத்தில் வாழ்வதைப் போல இன்றைக்கும் சிமை விளக்குகளை அந்தக் கிராம மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த இரண்டு கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சாரம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட வனத் துறையின் அடர்ந்த காட்டுப்*

[2015 செப்டம்பர் 28

பகுதிக்குள் அமைந்திருக்கும் என்று கருதுகிறேன். அதுபோன்று சில கிராமங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 105 கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவற்றில் சில கிராமங்களுக்கு தற்போது, சோலார் சூரிய ஒளி மின்சக்தி மூலமாக மின் இணைப்பு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலமாக மின் வழித்தடங்கள் அமைப்பதற்குப் பிரச்சினை ஒன்றும் இல்லை. TNEB தயாராகத்தான் இருக்கிறது. ஆனால், அவை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள் என்பதால், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினர் அங்கே புதிய மின் வழித்தடங்களை அமைப்பதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். பாதுகாக்கப்பட்ட காட்டுப் பகுதியில் எந்த ஒரு வேலையைச் செய்வதற்கும் வனத் துறை எப்போதும் அனுமதிப்பது இல்லை. அதனால்தான், அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் உள்ளடங்கியிருக்கிற அந்தக் கிராமங்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்க முடியவில்லை. ஆனாலும்கூட, அவ்வாறு மின்சாரத்தை விநியோகிக்க முடியாத பகுதிகளுக்கும் சூரிய ஒளி மின்சக்தி மூலமாக மின்சாரம் வழங்கப்படவேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருப்பதன் அடிப்படையில், சூரிய ஒளி மின்சக்தி மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது; அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடர்ந்த வனக் காட்டுப் பகுதிக்குள் இருக்கின்ற அனைத்துக் கிராமங்களுக்கும் படிப்படியாக சூரிய ஒளி மின்சக்தி மூலமாக மின்சாரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்து ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார். புதைவடம் மூலமாக அந்தப் பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்திடக் கோரியிருக்கிறார்கள். வனப் பகுதிகளில் இருக்கின்ற கிராமங்களுக்குச் செல்கின்ற மின் கம்பிகள்—aerial line ஆக இருப்பதால், அடிக்கடி காற்று, புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களின் காரணமாக மரங்கள் விழுந்து அந்த லைன் துண்டிக்கப்படுகிறது. அது இயற்கையாகவே அங்கே ஏற்படுகிறது. அது உண்மைதான். ஆனாலும்கூட, அதை மாற்றி அங்கே புதைவடம் மூலமாக மின் இணைப்பு கொடுக்கவேண்டுமென்றாலும், அதற்கும் மத்திய வனத் துறையினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. அந்த நிலத்தைத் தோண்டுகிறபோது, ஏதாவது ஒரு மரம்

பாதிக்கப்பட்டாலும்கூட, அதற்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. வனத் துறை அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். கடுமையான முயற்சிகள் மேற்கொண்டு, ஒரு வேளை வனத் துறையிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற்றாலும்கூட, அதனை அமைக்க மூன்று மடங்கு கூடுதலாகவும் செலவாகிறது. செலவு கூடுதலாக ஆனாலும்கூடப் பிரச்சினையில்லை. வனத் துறையிடமிருந்து அனுமதி வாங்குவதிலே பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால்தான், அப்படிப்பட்ட கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதிலே பிரச்சினை ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மத்திய வனத் துறையினுடைய அனுமதியைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மின் கம்பிகள் அவ்வப்போது ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றத்தினால் பழுதுபட்டாலும்கூட, அதை உடனடியாக சரிசெய்வதற்கு வேண்டிய முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 360, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

360—

புறவழிச் சாலை

***37749—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதி, திண்டுக்கல்—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை எண் 209—ல் உள்ள அன்னூர் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?